[1981 மார்ச் 23

கன்னியாகுமரி மாவட்ட தேவஸ்வம் போர்டு ஊழியர்கள்.

* 147 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கிழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வணிக வரி மற்றும் அறநிலையத் துறையின் 15—10—1979 ஆம் நாளிட்ட அரசு ஆணை நிலை எண். 1645-ல் கன்னியாகுமரி மாவட்ட தேவஸ்வம் போர்டின் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு ஒப்ப ஓய்வூதியமும், குடும்ப நல சலுகைகளும் 1—4—1979 முதல் உண்டு என ஆணைகள் அறிவிக்கப்பட்ட பிறகு, 1—4—1979-க்கு முன்னர் ஓய்வு பெற்ற அதிகாரிகளிடமிருந்து, தங்களுக்கு அரசு ஆணையின் பயனை நீட்டித்துத்தர வேண்டுமென்று, முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

(உ) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) ஆம்.

(இ) & (உ) இம்முறையீட்டினை அரசு ஆராய்ந்து 1—4—79-க்கு முன்னும் ஆனால் 1—1—75-க்குப் பின்னும் ஓய்வு பெற்ற 10 ஊழியர்களுக்கும் தமிழ்நாடு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகள் 1960-ன் கீழ் ஓய்வு ஊதியமும் குடும்ப ஓய்வூதியமும் பெறும் வகையில் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தொலைக்காட்சி நிலையங்கள்.

* 148 வினா.—திரு. சி.ரா. லெட்சுமிகாந்தன் : மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொலைக்காட்சி ரிலே நிலையங்கள் தமிழ்நாட்டில் எந்த இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன ?

(இ) திருச்சி, கோவை, மதுரை, நெல்லை ஆகிய இடங்களில் டெலிவிஷன் நிலையங்கள் கட்ட, மாநில அரசு மத்திய அரசிடம் முயற்சி செய்து வருகிறதா ?

1981 மார்ச் 23]

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) தமிழ்நாடு அரசின் வேண்டு கோளை ஏற்றுக்கொண்டு கோடைக்கானலில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்து, அதற்கு வேண்டிய நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(இ) இல்லை.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : இன்றைய தினம் இதுகுறித்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதிலே கோடைக்கானலிலே ஒரு தொலைக் காட்சி நிலையம் அமைக்கப்படுவதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி மத்திய அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதாக விவரங்கள் வந்திருக்கின்றன. கோடைக்கானலில் அமைக்கப்படுவது ஒரு முழுமையாக இயங்கக்கூடிய தொலைக் காட்சி நிலையமா அல்லது ஒரு ரிலே நிலையமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கோடைக்கானலிலே அமைக்கப்பட விருப்பது தொலைக் காட்சியினுடைய ஒளி பரப்பு, ரிலே நிலையம் தான். முழுமையான தொலைக் காட்சி நிலையம் அல்ல. இன்றைக்குப் பத்திரிகையிலே மதுரையில் அமைக்கும் அகில இந்திய வானொலி நிலையத்தைப் பற்றித் தான் செய்தி வந்திருக்கிறது. இது ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டிருக்கிற விவரம். கோடைக்கானலில் ஒளி பரப்புகின்ற நிலையம் தான் வருகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : சென்னையிலே இப்போது ஒரு டெலிவிஷன் நிலையம் இருக்கிறது. சென்னையிலே இருப்பது ஒரு குறிப்பிட்ட தூரத்திலே இருக்கின்ற மக்களுக்குத்தான் பயன் அளிக்கக் கூடிய அளவிலே இருக்கிறது. இந்த நிலைமையின் காரணமாக, தமிழகத்திலே உள்ள பல மாவட்டங்களிலே, அந்தப் பகுதி மக்கள் பயனடைய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே தமிழகத்தினுடைய முக்கிய மாவட்டத் தலைநகரங்களான திருச்சி, கோவை, மதுரை போன்ற இடங்களில் இதை அமைக்கவேண்டிய அவசியம் வருகிறது. அதைப்பற்றி அரசு ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தமிழகத்தின் தலைநகரத்திலே இப்போது இப்படிப்பட்ட டெலிவிஷன் நிலையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் கர்நாடகம், ஆந்திர மாநிலங்களின் தலைநகரங்களிலே இல்லை என்ற கோரிக்கைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அந்தச் சூழ்நிலையில் தமிழகம் மீண்டும் ஒரு டெலிவிஷன் நிலையம் கேட்பது என்பதோ, அதற்கு அவர்கள் ஒப்புதல் அளிப்பது என்பதோ இயலாத காரியம். இந்த ஒளி பரப்புகின்ற ரிலே ஸ்டேஷன் 180 கிலோ மீட்டர் ரேடியஸ் சுற்றளவுக்குப் பயன் அளிக்கும் என்று

தகவல் தாப்பட்டிருக்கிறது. 170 லட்சம் மக்கள் தொகை அடங்கிய 60 ஆயிரம் கிலோமீட்டர் அளவுப் பகுதிக்குள் இந்த நிலையம் இருந்தால் ஒளி பரப்புக் கிடைக்கும். ஆகவே நம் மாநிலத்தில் இதனாலே பெருமளவுக்குப் பயன் அடைய முடியும். இந்த அளவுக்காவது நமக்குக் கிடைக்கிறதே என்று நாம் பெருமையாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. முத்துசாமி : 180 கிலோ மீட்டர் சுற்றளவுக்குத்தான் பயன் அளிக்கும் என்று சொல்கிறார்கள். அது சேலம் பகுதி அளவில் கிடைக்குமா என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. ஏற்காட்டிலே அப்படிப்பட்ட ஒரு ரிலே நிலையம் அமைக்க செயற்குறிப்பு உண்டா? சமீபத்திலேகூட ஆசிரியர்கள் மகாநாட்டில் மத்திய ஒலிபரப்புத் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, எல்லா கிராமங்களுக்கும் தொலைக்காட்சி ஏற்படுத்துவதாக ஒரு கொள்கையை அறிவித்தார்கள். அந்த அடிப்படையிலே ஏற்காட்டிலே அதை அமைக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தமிழகத்திலே தலைநகரில் முதலில் தொலைக் காட்சி நிலையம் ஏற்படுத்தப்பட்டது. இப்போது அது விரிவு படுத்த ஒளிபரப்பு ரிலே ஸ்டேஷன் ஏற்படுத்தப்படுகிறது. இரண்டாவது முயற்சியிலே நமக்கு வெற்றி கிடைத்திருக்கிறது. இதைத் தொடர்ந்து ஏற்காடு என்று கேட்பதைவிட, நீலகிரி மலையின் உச்சியிலே அமைத்தால், இன்னும் பலன் இருக்கும் என்ற கருத்து ஆராயப்படுவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். முதலிலே இது நிறைவேறட்டும். அதற்குப் பிறகு அடுத்ததற்கு நாம் கோரிக்கை வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

டாக்டர் இரா. சனார்த்தனம் : வெளி நாடுகளில் எல்லாம் கலர் டி.வி. வந்திருக்கிறது. எனவே அடுத்த கட்டமாக நீலமலையில் தொலைக் காட்சி ரிலே நிலையம் அமைக்கும்போது, கலர் டி.வி. வைக்க நம்முடைய அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கலர் டி.வி. பற்றி கருத்து தெரிவித்த காரணத்தாலே, மத்திய ஒலி பரப்புத் துறை அமைச்சரவர்கள் பல்வேறு சங்கடங்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் ஆளாகியிருக்கிறார்கள் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவித்திருக்கின்றன. எனவே இந்தக் கேள்வியை நாம் நாடாளுமன்றத்தில்தான் கேட்க வேண்டும்.